மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : சிறுபான்மை மொழி பேசும் மக்களுக்கு நாம் அவர்களுடைய தாய் மொழியிலேயே கல்வி கற்பிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. அந்த அடிப்படையில்தான் இந்தப் பிரச்சினையை நாம் அணுக வேண்டியிருக்கிறது. இது தவிர வேறு சங்கடங்கள் இருக்குமானால், நிச்சயமாக அரசு அதைப் பரிசீலிக்கும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : 'கன்சல்டேடிவ் கமிட்டி' என்பது எந்த அடிப் படையில் இருக்கும் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : 'கன்சல்டேடிவ் கமிட்டி' என்பது பேரவை, மேலவை உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கும். பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைவராக இருந்திருக்கிறார்கள். கல்வி அமைச்சர் துணைத் தலைவராக இருந்திருக்கிறார்கள். மற்றவர்கள் உறுப்பினர்களாக இருந்திருக் கிறார்கள். எந்த முறையில் அமைக்கலாம் என்று அரசு யோசித்து முடிவெடுக்கும்.

5. இரங்கல் குறிப்பு.

திராவிடர் கழகத் தலைவரும், பெரியார் ஈ. வே. ரா. அவர்களின் மனைவியாருமான திருமதி மணி அம்மையார் அவர்கள் மறைவு குறித்து

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவைக்கு ஒரு அறிவிப்பைச் சொல்ல விரும்புகிறேன்.

திராவிடர் கழகத் தலைவரும், பெரியார் ஈ. வே. ரா. அவர்களின் மனைவி யாருமான திருமதி மணி அம்மையார் அவர்கள் காலமாகிவிட்டார்கள் என்று இங்கே செய்தி கிடைத்திருக்கிறது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மணியம்மையார் அவர்கள் மிகப் பெரிய சமூக சீர்திருத்தப் புரட்சியாள ராகத் திகழ்ந்து, தேச விடுதலைப் போராட்டத்தில் நீண்டகாலம் பங்கு பெற்று இந்த நாட்டில் அறிவியக்கத்தைப் பரப்பிய பெரியார் அவர்களுடைய தொண்டில் இரண்டறக் கலந்து பாடுபட்டவர்கள். அந்த முறையில் தமிழகம் அவருக்கு அஞ்சலி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது. எனவே இந்த அவை ஒரு நிமிட நேரம் மௌனமாக எழுந்திருந்து அவருக்கு அஞ்சலி செலுத்தக் கோருகிறேன்.

அவை உறுப்பினர்கள் அனைவரும் மௌனமாக ஒரு நிமிட நேரம் எழுந்து நின்றனர்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை காலை 10-30 மணிக்குக் கூடும்.

(பிற்பகல் 1-50)

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

6. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

302. Tamil Nadu Government review on the working of the Tamil Nadu Textile Corporation Limited for the year ended 31st December 1974 together with Sixth Annual Report and Statement of Accounts. (Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).

303. Notifications issued with G.O. Ms. No. 2117, Commercial Taxes and Religious Endowments, dated the 19th December 1977 in regard to amendments to the Tamil Nadu Entertainments Tax Rules, 1939. (Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).

304. Notification issued with G.O. Ms. No. 3495, Home, dated the 31st December 1977 in regard to amendments to the Madras Liquor (Licence and Permit) Rules, 1960. (Laid on the table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).